# ரூத்

நியாயாதிபதிகளின் கடைசி நாட்களில், கி.மு. 1100 இல் ஒரு இஸ்ரவேல் குடும்பம் இஸ்ரவேலில் பஞ்சம் ஏற்பட்டதன் காரணமாக மோவாப் தேசத்திற்குத் தப்பிச் சென்றார்கள். அங்கு தகப்பனும் இரண்டு பிள்ளைகளும் மரித்த பிற்பாடு அவர்கள் இஸ்ரவேல் தேசத்திற்குத் திரும்பி வந்தார்கள். அவர்களுடன் மோவாப்பிய பெண்ணான மருமகளாகிய ரூத் என்பவளும் அவர்களுடன் வந்தாள். இதில் விசுவாசம், அன்பு , திருமணம் என்பன கலந்துள்ள ஒரு அழகான கதையாகும். இது வேதாகமத்தில் சேர்க்கப்பட்டுள்ள காரணம் இந்த மோவாப்பிய பெண், போவாஸ் என்னும் இஸ்ரவேலனை இரண்டாவது கணவனாக ஏற்றுக்கொண்டாள், இவர்களின் பரம்பரையிலேயே மேசியாவாகிய கிறிஸ்த்து பிறந்தார்.

| | |
|---|---|
| **ரூத்தின் செயற்பாடுகள்** | **1100. கி.மு** |
| **சாமுவேலின் அழைப்பு** | **1093. கி.மு** |
| **சிம்சோன்- இறுதி நியாயாதிபதி.** | **1075. கி.மு** |
| **சவுல் முதலாவது ராஜா** | **1051. கி.மு** |
| **தாவீது, ரூத்தின் பரம்பரையில் வந்தவர் ராஜாவாகினார்.** | **1004. கி.மு** |

**பின்னணி;-** நியாயாதிபதிகளின் கடைசி நாட்களில், கி.மு1100 இல் ஒரு இஸ்ரவேல் குடும்பம் இஸ்ரவேலில் பஞ்சம் ஏற்பட்டதன் காரணமாக மோவாப் தேசத்திற்குத் தப்பிச் சென்றார்கள்.அங்கு தகப்பனும் இரண்டு பிள்ளைகளும் மரித்த பிற்பாடு அவர்கள் இஸ்ரவேல் தேசத்திற்குத் திரும்பி வந்தார்கள். அவர்களுடன் மோவாப்பிய பெண்ணான மருமகளாகிய ரூத் என்பவளும் அவர்களுடன் வந்தாள். இதில் விசுவாசம், அன்பு , திருமணம்

ரூத்.

என்பன கலந்துள்ள ஒரு அழகான கதையாகும். இது வேதாகமத்தில் சேர்க்கப்பட்டுள்ள காரணம் இந்த மோவாப்பிய பெண், போவாஸ் என்னும் இஸ்ரவேலனை இரண்டாவது கணவனாக ஏற்றுக் கொண்டாள், இவர்களின் பரம்பரையிலேயே மேசியாவாகிய கிறிஸ்த்து பிறந்தார்.

**எழுதியவர்**: யார் என்று தெரியாது.

**காலமும் இடமும்.** இந்தக் கதை ஆரம்பமான போது இதில் எந்த முக்கியத் துவமும் இருக்கவில்லை ஆனால் சில பரம்பரை கடந்தபின்பு சில காரணங் களுக்காக இது முக்கியத்துவம் உள்ளதாக மாறியது.

- இந்தபுத்தகத்தின் இறுதியில் தாவீது குறிப்பிடப்படுகின்றார், இவர் போவாசினுடையதும், ரூத்தினுடையதுமான பேரப்பிள்ளையாகும்.
- ➢ இயேசுக்கிறிஸ்த்துவும் இந்தப்பரம்பரையிலேயே வந்தார்.

**நோக்கம்**

ரூத் புத்தகத்தின் தொடக்கமும் முடிவும் இதன் நோக்கங்களை வெளிடுத்துகின்றன.

• இந்தப் புத்தகம் ஒரு சந்ததியுடன் முடிடைகின்றது. கடைசி வார்த்தையானது தாவீது என்பதாகும். ரூத் புத்தகத்தின் ஆரம்பம் கர்த்தருடைய தாவீதின் பரம்பரைக்கான அத்தாட்சிகளைக் கொண்டுள்ளது.

• இரண்டாவது காரணம் புத்தகத்தைத் தொடர்ந்து பார்க்கும்போது தெரிய வருகின்றது. நகோமி தன்னுடைய மருமகளுக்குத் தேவையான பாதுகாப்பு அல்லது வாழ்க்கத்துணை கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் காணப்படு கின்றாள். ரூத்திற்கு ஒரு நிரந்தர இருப்பிடம் கிடைக்க வேண்டும் என்பதே நகோமியின் விருப்பமாக இருக்கின்றது. ரூத் கர்த்தருக்குள்ளாக இஸ்வேல ருக்குள் ஒரு நிரந்தர இடத்தைப் பெற்றுக் கொண்டாள். புறஜாதியாருக்கான கர்த்தருடைய கிருபையை ரூத்தில் நாம் அவதானிக்க முடியும்.

• இறுதி நோக்கமானது, கர்த்தருடைய அற்புதமான வழியையும் காண்பி க்கின்றது, கர்த்தர் சில சமயங்களில் ஒளித்து வைத்த சில பாதைகளைத் திறந்து அதன்மூலம் நன்மைகளைச் செய்கின்றார். நகோமி ஒன்று

ரூத்.

மில்லாதவளாக 1;21 இல் காணப்படுகின்றாள், ஆனால் 4;16 இல் ஒரு மகன் அவளுக்கு கர்த்தர் கொடுத்திருப்பதைப் பார்க்கிறோம். நகோமியில் ஆவிக்குரிய நிரப்புதலை நாம் முன்னோடியாகக் காணமுடிகின்றது. நகோமியை எப்படியாவது போஷிக்க வேண்டும் என்ற உணர்வு போவாசின் இருதயத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.(3:17),

**சிறப்பியல்புகள்.**

ரூத் புத்தகம் மிகச் சிறப்பான இரட்சிப்பின் செய்தியைக் கொண்டுள்ளது. சட்டம் இந்தப் பெண்ணுக்கு நன்மைகளைக் கொண்டுவந்தது. இவளின் கணவன் இறந்துவிட்டான், வாரிசுகள் ஒன்றுமில்லை, சொத்துக்களும் ஒன்றுமில்லை. அவளுடைய சொத்துக்களும், உரிமையாளர்களும் அதிகிட்டிய உறவினர் மூலமாகவே கிடைக்க வேண்டும். அல்லது சுதந்திரவாளி. (உபா25:5-10) (லேவி25:25-28). இந்தச் சட்டமானது அனேகமாக மைத்துணருக்கே பொருத்தமானது. ஆதி. 38:1-10 இதில் அடங்கியுள்ள பதிவுகளைவிட ரூத் மிகவும் சிறப்பாக இதனை விளக்குகின்றது. சுதந்திரவாளிக்கு மூன்று விஷேசித்த தன்மைகள் இருத்தல் வேண்டும்.

**சுதந்திரவாளிக்கு இருக்க வேண்டிய பண்புகள்.**

- இரத்த சம்பந்தமான உறவினராக இருத்தல் வேண்டும்.
- மீட்பதற்கு விருப்பமுள்ளவராக இருத்தல் வேண்டும்.
- மீட்பின் கிரயத்தைக் கொடுக்கக்கூடியவராக இருத்தல் வேண்டும். மீட்பரான சுதந்திரவாளி கிறிஸ்துவுக்கே மிகப் பொருத்தமாக இருக்கின்றது, அவருக்கே இந்த எல்லா குணாம்சங்களும் இருக்கின்றது.(கலா 4:4-5 எபே1:7 எபிரே2:14-15; 1பேதுரு.1:18-19).

**மற்றப் புத்தகங்களுடன் ஒப்பீடு செய்தல்- ஆதியாகமம்.**

• ஆதியாகமத்தைப் போல், ரூத்தும் கர்த்தருடைய கொடுப்பனவுகளைக் கொண்டுள்ளது. ஆனால் கர்த்தருடைய திட்டம் தற்செயலாக நடந்தது போல் தோன்றுகிறது, யோசேப்பு எகிப்தில் சரியான இடத்தில் சரியான நேரத்தில் இருந்தான். ஆபிரகாம் ஆதியாகம் 24 இல் நேர்ந்தது போல்

ரூத்.

• ஆதியாகமம் 4;18 இல் சந்ததிகளின் வரலாறு கூறப்பட்டுள்ளது போல எஸ்தர் புத்தகத்திலும் நாம் காணமுடியும்

• ரூத் புறஜாதிப்பெண், அவள் யூதர்கள் மத்தியில் வாழ்ந்து வந்தாள், எஸ்தர் ஒரு யூதப் பெண் அவள் புறஜாதியார் மத்தியிலே வாழ்ந்து வந்தாள்.

• ரூத் யூதனைத் திருமணம் செய்திருந்தாள், ஆனால் எஸ்தர் புறஜாதியானைத் திருமணம் செய்திருந்தாள்.

- ரூத்தும், எஸ்தர் ஆகிய இருவரும் ஒரு உறவுக்காரருக்குக் கீழ்ப்படிய வேண்டி இருந்தது. ( ரூத் தன்னுடைய மாமியாராகிய நகோமிக்கும், எஸ்தர் தன்னுடைய மாமனாராகிய மொர்கதாய்க்கும் கீழப்படிய வேண்டி இருந்தது) இருவரும் தங்கள் கீழ்படிதலினால் நன்மைகளைப் பெற்றுக் கொண்டார்கள்.
- இரண்டு புத்தகங்களிலும் தற்செயலாக வாழ்வில் நடந்தவற்றைக் கர்த்தர் நன்மையாக மாற்றிய சாட்சிகளை காணமுடியும்.

**சுருக்கம்.**

1. ரூத்தினுடைய விரதம் (1)
2. நாடகத்தின் ஆயத்தம் (1:1-5)
3. திரும்பிச் செல்லும்படியான நகோமியின் மூன்று கட்டளைகள். (1:6-15)
4. கர்த்தருடனும் ஜனத்தாருடனும் மீண்டும் இணைவதற்கான முயற்சி (1:16-18)
5. நகோமியின் வெறுமை (1:19-22)
6. ரூத் அறுவடை செய்தல். (2)
7. போவாசினுடைய அறிமுகம். (2:1-3)
8. ரூத்தை போவாஸ் விஷேடமாக அவதானித்தல். (2:4-17)
9. போவாசைக் குறித்து நகோமி கோள்விப்பட்ட போது சந்தோஷ மடைந்தாள். (2:18-23)
10. ரூத்தினுடைய வேண்டுகோள். (3)
11. நகோமியின் திட்டம். (3:1-5)
12. ரூத்தினுடைய விண்ணப்பம் (3:6-9)

ரூத்.

**போவாசின் வாக்குறுதி**.(3:10-13)

1. ரூத் நகோமியிடம் திரும்பிச் செல்லுதல்.(3:14-18)
2. ரூத் மீட்கப்படல். (4)
3. போவாஸ் கிட்டிய மீட்பரைச் சந்தித்தல். (4:1-8)
4. போவாஸ் கிட்டிய மீட்பர் என்பது உறுதிப்படல்.(4:9-12)
5. **போவாஸ்**, ரூத் திருமணம். நகோமியின் ஆசீர்வாம்.(4:13-17)

**பரம்பரை;** ரூத் முதல் தாவீது வரை (4:18-22)

**ரூத்தினுடைய விரதம்(1)**

**1:1-5** .யூத குடும்பம் மோவாப்பிற்கு இடம்பெயர்ந்து சென்றார்கள். இஸ்ரவேலில் அதிக பஞ்சம் ஏற்பட்டபடியால் எலிமலேக்குவும் நகோமியும் அவர்களுடைய குடும்பத்தாருடன் மோவாப்பிற்கு இடம்பெயர்ந்து சென்றார்கள். இந்தக்கால த்தில் மோவாப், யூதாவுக்கான எதிரி நாடாக இருக்கவுமில்லை. மோவாப்பில் இருந்த போது இந்தக் குடும்பம் அதிக வேதனைகளைச் சுமந்த வண்ணமாக இருந்தார்கள். முதலாவதாக எபிமலேக்கு மரித்தார். அதன் பிற்பாடு மோவாப் பிய பெண்களை இரண்டு குமாரரும் திருமணம் செய்தார்கள். அவர்களும் விரைவில் மரித்துவிட்டார்கள். அந்தக் குடும்பம் நகொமியும், இரண்டு புறஜாதி மருமக்களுமாகக் குறைவடைந்தது.

**1:6-18 "உன்னுடைய ஜனம் என்னுடைய ஜனம்"** இஸ்ரவேலில் பஞ்சம் நீங்கி விட்டது என்பதைக் கேள்ளிப்பட்ட நகோமி இஸ்ரவேலுக்குப் போவதற்குத் தீர்மானித்தாள். ஆனால் தங்கள் மருமக்களை அவர்கள் தேசத்திலே இருந்து வேறு திருமணத்தை முடிக்கும்படியும் வேண்டிக் கொண்டாள். அதற்கிணங்க ஒர்பாள் அவ்வாறு செய்தாள், ஆனால் ரூத்தினால் தன்னுடைய அன்பான மாமியாரை விட்டுப்பிரிய மனதில்லாதவளாக இருந்தாள். அவள் தான் நகோ மியையும், அவளுடைய ஜனத்தாரையும், அவர்களுடைய தெய்வமாகிய கர்த் தரையும் சேவிக்கப் போவதாக பற்றுதியாகக் கூறினாள். நகோமி மருமக்களு க்கு ஒரு இளைப்பாறுதலைத் தேடினாள். (1:9; 3:1, 18), ஆனால் நகோமி இளைப் பாறுதல் அற்றவளாக இருந்தாள். (1:20), அவள் தனக்கும் இளைப்பாறுதலைத் தேடினாள். (4:13-16**).**

ரூத்.

1:19-22 **மீண்டும் பெத்தலகேமில்**. நகோமியும், ரூத்தும் மீண்டும் இஸ்ரவேலுக்கு வந்தது ஒரு எழிற்சியாகவே இருந்தது. அவள் தன்னுடைய வாழ்க்கை நீண்ட காலம் சந்தோஷமாக இருக்கவில்லை என்ற உணர்வுடன் இருந்தாள். நகோமி தன்னை மாராள் என்று அழைக்கும்படி வேண்டிக் கொண்டாள், அதன் அர்த்தம் கசப்பு என்பதாகும்.(யாத் 15:23).

**ரூத் அறுவடை செய்தல்.** (2)

<u>2:1-17 பிரமச்சாரி போவாசின் வரவு.</u>

போவாஸ், ஒரு திருமணம் ஆகாத எபிமலேக்கின் உறவினர், தன்னுடைய வயலில் ரூத் கதிர்களைப் பொறுக்குவதை அவதானித்தான், அவள் நகோமிக்கு வேண்டப்பட்டவள் என்பதையும் அறிந்திருந்தான், அதனால் அவளை அன்பாக நடத்தினான். அவளை ஒரு வரும் நெருக்ககூடாது என்றும், எவ்வளவு நேரம் கதிர் பொறுக்கலாம் என்றும் தன்னுடைய வேலைக்காரருக்குக் கட்டளையிட்டான், மேலும் ஒரு சில கதிர்களை அவளருகில் விட்டுச் செல்லுமாறும் கூறினான்.

2:18-23 **"போவாஸ், என்று சொல்கிறாயா? கர்த்தருக்கே மகிமை உண்டாகட்டும்".** ரூத் எங்கே வேலை செய்கிறாள் என்று அறிந்த போது, போவாஸ் நெருங்கிய உறவினர் மீட்பர் என்று அறிந்து நகோமி மனமகிழ்ச் சியடைந்தாள். அவன் தன்னுடைய மருமகளை மீட்பதற்கான எல்லாத் தகமைகளையும் கொண்டுள்ளான்.



ரூத்.

**ரூத்தின் வேண்டுகோள்.(3)**

**3:1-5** அவளுடைய குறிக்கோள். போவாஸ் அவளை மீட்டுக் கொள்ள வேண்டும் என்பதற்காக ரூத்திற்கான திட்டங்களை நகோமி வகுத்தாள். போவாஸ் இரவில் இளைப்பாறிய போது, ரூத் கீழே படுத்திருந்தாள், அவனுடைய கால்கள் மூடாமல் இருந்தன, அவனுடன் பேசுவதற்கான ஒரு சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்தாள். இது ஒரு உள்ளூர் வழமையாகும், ரூத் இந்தபழக்கத்திற்கு அன்னியவளாக இருந்தபோதும், நகோமியின் வேண்டுதலுக்கு கீழப்படிந்தாள்.

<u>**3:6-13** நான் உன்னை நேசிக்கிறேன்</u>

ஆனாலும் ஒரு பிரச்சனையுண்டு" நித்திரையாக இருந்த போவாசின் போர்வையை ரூத் விலக்கிவிட்டாள், நடு இராத்திரியிலே தன்னருகே ஒரு பெண் படுத்திருப்பதை அவன் அறிந்து கொண்டான். அவள் யார் என்பதையும், அவளுடைய தேவை என்ன என்பதையும் போவாஸ் அறிந்து கொண்டான், போவாஸ் அவளுடைய மீட்பராக வருவதற்குச் சம்மதித்தான். ரூத்தின் விருப்பத்தை நிறைவு செய்வதற்கு தன்னிலும் கிட்டிய ஒரு உறவினர் இருக்கிறபடியால், முதலில் அவரிடம்தான் இந்த விண்ணப்பத்தைக் கூறவேண்டும் என்றார், அவர் மறுக்கும் பட்சத்தில் தான் அவளுடைய மீடபராக வருவேன் என்று போவாஸ் உறுதியளித்தார். நீர் உம்முடைய அடியாள் மேல் உம்முடைய போர்வையை விரியும்; நீர் சுதந்தரவாளி என்றாள். இது திருமணம் முடித்துக்கொள் என்பதற்கான ஒரு பேச்சாகும். அவர் கொடுத்த அடைக்கலமும் திருமணத்திற்கான அடையாளமாகும். (2:4-13), இஸ்ரவேலின் தேவனுடைய நிழலில் இழைப்பாறும்படி போவாஸ் கூறினான். (2:12).

**3:14-18** தன்னை மற்றவர்கள் அடையாளம் காணுமுன்னே அவள் அந்த இடத்தை விட்டு வெளியேறிவிட்டாள். ரூத் போவாசுடன் சேர்ந்து நித்திரை கொள்ளவில்லை. மற்றவர்கள் கண்டு அவதூறு பேசும் முன்னே அவள் வெளி யேறிவிட்டாள். எப்படி தான் அந்த இரவைப் போவாசின் இடத்தில் கழித்தேன் என்றும்,அவர் எப்படி நன்றாகத் தன்னை நடத்தினார் என்றும் கூறினாள்.

ரூத்.

ரூத்திற்காக போவாஸ் எப்படி நடந்து கொள்ளுவான் என்று நகோமி அறிந்திருந்தாள்

**ரூத்தினுடைய மீட்பு. (4)**

**4:1-6** . தன்**னிலும்** பார்க்க உரிமையுள்ளவனிடம் போவாஸ் பேசினான். நகோமி போவாசின் மீது நம்பிக்கையைக் காண்பித்த போதும், போவாஸ் நகரத்தின் வாசல்வரை சென்று, நகோமியினுயதும் ரூத்தினுடையதும் கிட்டத்து உறவாளனைச் சந்தித்து அவர்களை மீட்பது சம்பந்தமாக உரையாடினான். ஆரம்பத்தில் அந்த மனிதன் அவர்களின் நிலத்தை மீட்பதற்குச் சம்மதி த்தான், போவாஸ் அந்த வயல் நிலத்தை வாங்குகிற நாளிலே மரித்தவ னுடைய சுதந்தரத்தில் அவன் பேரை நிலைநிற்கப்பண்ணும்படிக்கு, அதை மரித்தவன் மனைவியாகிய மோவாபிய ஸ்திரீயான ரூத்தையும் வாங்க வேண்டியது என்றான். அப்பொழுது அந்தச் சுதந்தரவாளி: நான் என் சுதந்தர த்தைக் கெடுக்காதபடிக்கு, நான் அதை மீட்டுக்கொள்ளமாட்டேன்; நான் மீட்கத்தக்கதை நீர் மீட்டுக்கொள்ளும்; நான் அதை மீட்டுக்கொள்ளமாட்டேன் என்றான்.

**4:7-12 பாதரட்சையின் மூலம் அவன் ஒரு அறிக்கையை விடுத்தான்.** மீட்கிறதிலும் மாற்றுகிறதிலும் சகல காரியத்தையும் உறுதிப்படுத்தும்படிக்கு, இஸ்ரவேலிலே பூர்வகால வழக்கம் என்னவென்றால், ஒருவன் தன் பாதரட் சையைக் கழற்றி, மற்றவனுக்குக் கொடுப்பான், இது இஸ்ரவேலிலே வழங்கின உறுதிப்பாடு.அப்படியே அந்தச் சுதந்தரவாளி போவாசை நோக்கி: நீர் அதை வாங்கிக் கொள்ளும் என்று சொல்லி, தன் பாதரட்சையைக் கழற்றிப் போட்டான். அப்பொழுது போவாஸ் மூப்பரையும் சகல ஜனங்களையும் நோக்கி: எலிமெலேக்குக்கு இருந்த எல்லாவற்றையும் கிலியோனுக்கும் மக்லோனுக்கும் இருந்த எல்லாவற்றையும் நகோமியின் கையிலே வாங்கிக் கொண்டேன் என்பதற்கு இன்றைய தினம் நீங்கள் சாட்சி. இதுவுமல்லாமல், மரித்தவனுடைய சகோதரருக்குள்ளும், ஊராருக்குள்ளும், அவனுடைய பேர் அற்றுப்போகாமல், மரித்தவனுடைய சுதந்தரத்திலே அவன் பேரை நிலை நிறுத்த, நான் மக்லோனின் மனைவியாயிருந்த மோவாபிய ஸ்திரீயான ரூத்தை எனக்கு மனைவியாகக் கொண்டேன்; அதற்கும் இன்றைய தினம் நீங்கள் சாட்சி என்றான். (உபா. 25:5-10)

**4:13-17.** அவர்கள் திருமணம் முடித்தார்கள். அவள் ஆசீர்வதிக்கப்பட்டாள்.

திராணி

ரூத்.

ரூத்தும்,போவாசும் திருமணம் செய்து ஒரு மகனைப் பெற்றெடுத்தார்கள். நகோமியின் உறவினர்கள் அந்தப்பிள்ளை நகோமிக்குப் பெரிய ஆசீர்வாத மானவன் என்று கூறி மகிழ்ந்தார்கள்.
4:18-22 அவளுடைய மகன். தாவீது ராஜாவின் பெரிய பெரிய தகப்பனார். ரூத் புத்தகத்தின் கடைசி வசனங்கள் போவாசின் சந்ததியைக் கூறுகின்றது.அந்த சந்ததி இஸ்ரவேலர்களுக்கு மேசியாவைக் கொடுத்தது. கர்த்தர் இஸ்ரவேல ர்களுக் கூடாகமட்டும் தன்னுடைய செயற்பாடுகளைக் காண்பிக்கவில்லை, மாறாக மோவாப்பியருக்கூடாகவும் கானானியருக்கூடாகவும் (ராகாப்) செயற்பட்டார். ரூத் தாவீது ராஜாவின் பெரிய பெரிய தாயார்.போவாஸ் ராகாப்பின் மகன். ராகாப் கானானிய வேசியாவாள்.

**ரூத் புத்தகத்திலிருந்து ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டியவர்கள்.**

**போவாஸ்**

**முக்கிய செயற்பாடுகள்;-** ரூத்தைத் திருமணம் செய்தார்.கிறிஸ்துவின் மூதாதையரானார். (4:13, 21-22; மத் 1:5-16)

**தகப்பன்-** சாலொமோன் (4:21)

**தாயார்** - ராகாப் (மத்1:5)

**மனைவி**–ரூத். (4:13)

**மகன்** - ஓபேத்(4:13, 17).

**தொழில்** -- விவசாயி (2:3)

**போவாசிடமிருந்து கற்றுக் கொள்ளக்கூடிய ஆவிக்குரிய பாடங்கள்**

- நாம் ஒவ்வொருத்தரையும் அன்பாக நடத்துதல் வேண்டும்– அந்நியரையும் கூட அதன் மூலம் எங்களுக்கு என்ன நேரிடும் என்று நாம் அறியோம். (எபி13:1-2).போவாஸ் அன்பு காண்பித்தார். (2:5-16) அதனால் அன்பான மனைவியை பெற்றுக் கொண்டார். (4:13).
- எவ்வளுக்கு எவ்வளவு ரூத்தை நோசித்தானோ, அந்தளவுக்கு சட்ட ஒழுங்களையும பின்பற்ற வேண்டும் என்ற பயமும் போவாசுக்கு இருந்தது, அதனால் சில குறிப்பிட்ட சட்ட ஒழுங்களையும், ரூத்தைக் கைப் பிடிப்பதற்கு முன்பாகச் செய்து முடித்தான், (3:12-13).குறிகிய

ரூத்.

உணர்ச்சியின் வழிகள் மூலம் தேவனுடைய செயல்களையோ அல்லது சட்டத்தின் செயல்களையோ செய்யமுடியாது.

- கர்த்தரில் காத்திருந்து அவர் மூலம் கிடைக்கும் மிகத் திறமையானதைப் பெற்றுக் கொள்வதற்கான தீர்மானத்தை மேற் கொள்வதற்கான சந்தர்ப்பங்களைக் கர்த்தர் ஏற்படுத்துவார், போவாஸ் காத்திருந்து நல்ல மனைவியைப் பெற்றுக் கொண்டான் அதன் மூலம் கிறிஸ்த்துவின் மூதாதையரானான். (1:15-18; 2:11-12; 4:13-22).

**திறவு கோல் வசனம்.** இதுவுமல்லாமல், மரித்தவனுடைய சகோதரருக் குள்ளும், ஊராருக்குள்ளும், அவனுடைய பேர் அற்றுப் போகாமல், மரித்தவனுடைய சுதந்தரத்திலே அவன் பேரை நிலைநிறுத்த, நான் மக்லோனின் மனைவியாயிருந்த மோவாபிய ஸ்திரீயான ரூத்தை எனக்கு மனைவியாகக் கொண்டேன்; அதற்கும் இன்றைய தினம் நீங்கள் சாட்சி என்றான். (4:10).

**நகோமி**

ரூத்தின் கணவனின் தாயார்.(1:3-6)

**கணவன்** - எலிமலேக்கு (1:2)

**மகன்மார்**. மகிலேன், கிலியோன். (1:2)

**முக்கிய வசனம்**.-பின்பு அவள் மாமியாகிய நகோமி அவளை நோக்கி: என் மகளே, நீ சுகமாய் வாழ்ந்திருக்கும்படி நான் உனக்குச் சவுக்கியத்தைத் தேடாதிருப்பேனோ?

**ரூத்.**

**தாவீதின் பெரிய தாய்.,கிறிஸ்த்துவின் மூதாதையர்.**(4:13, 21-22; மத் 1:5)

**கணவன்**- மகிலோன், போவஸ். (4:10-13)

**மகன்-** ஓபேத்(4:13, 17)

**முக்கிய வசனம்**. அதற்கு ரூத்: நான் உம்மைப் பின்பற்றாமல் உம்மை விட்டுத் திரும்பிப் போவதைக் குறித்து, என்னோடே பேச வேண்டாம்; நீர் போகும் இடத்திற்கு நானும் வருவேன்; நீர்தங்கும் இடத்திலே நானும்

ரூத்.

தங்குவேன்; உம்முடைய ஜனம் என்னுடைய ஜனம்; உம்முடைய தேவன் என்னுடைய தேவன். நீர் மரணமடையும் இடத்தில் நானும் மரணமடைந்து, அங்கே அடக்கம் பண்ணப்படுவேன்; மரணமேயல்லாமல் வேறொன்றும் உம்மை விட்டு என்னைப் பிரித்தால், கர்த்தர் அதற்குச் சரியாகவும் அதற்கு அதிகமாகவும் எனக்குச் செய்யக்கடவர் என்றாள். (1:16-17).

நன்றி கர்த்தாவே

திராணி.

உசாத்துணை நூல்கள்

**WILLMINGTON'S**

**WILLMINGTON'S GUIDE TO THE BIBLE** *by* **Dr. H. L. Willmington TYNDALE HOUSE PUBLISHERS, INC. Wheaton, Illinois**

WILLMINGTON'S BIBLE HANDBOOK *by* Harold L. Willmington TYNDALE HOUSE PUBLISHERS, INC. Wheaton, Illinois

Thomas Nelson Publishers. (1996). *Nelson's complete book of Bible maps & charts : Old and New Testaments.* "Completely revised and updated comfort print edition"; Includes indexes. (Rev. and updated ed.). Nashville, Tenn.: Thomas Nelson.